**சுருக்கம்**

சுற்றுலா – மாநில அரசு திட்டம் – சுற்றுலா சாலை மேம்பாடு – புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை, திருவேங்கைவாசல் அருள்மிகு பிரகதாம்பாள், திருவேங்கைநாதர் திருக்கோயில் மற்றும் திருநல்லூர் அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்மன் திருக்கோயில்களுக்கு செல்லும் சாலையினை ரூ.376.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் மேம்படுத்துதல் – நிதி ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (சு3) துறை**

**அரசாணை (நிலை) எண்.57** **நாள் 17.02.2015**

திருவள்ளுவராண்டு 2046, ஜய, மாசி 5

**படிக்கப்பட்டது–**

1. மாவட்ட ஆட்சித்தலைவர், புதுக்கோட்டை மாவட்டம் அவர்களின் கடிதம் ந.க.வி3/2525/2014(வளர்ச்சி), நாள் 09.6.2014.
2. சுற்றுலா ஆணையரின் கடித எண்.7467/திமவ2/2014, நாள் 18.10.2014.

•••

**ஆணை–**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருவேங்கைவாசல் அருள்மிகு பிரகதாம்பாள் திருவேங்கைநாதர் திருக்கோயில் மற்றும் திருநல்லூர் அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்மன் திருக்கோயில்களுக்கு செல்லும் தார்ச்சாலையினை ரூ. 376.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் பின்வருமாறு மேம்படுத்த, சுற்றுலாத்துறையின் மூலம் நிதி ஒதுக்கீடு செய்துதரக்கோரும் கருத்துரு, புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெறப்பட்டுள்ளதாக சுற்றுலா ஆணையர் தெரிவித்துள்ளார்.

| வ. எண் | சாலைப்பணி விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | இலுப்பூர்–ஆலங்குளம் தார்ச்சாலை மேம்பாடு செய்தல் (கி.மீ.4/0–7/0) (கிராமச் சாலை) | 130.00 |
| 2. | இலுப்பூர்–ஆலங்குளம் தார்ச்சாலை மேம்பாடு செய்தல் (கி.மீ.7/0–10/0) (கிராமச் சாலை) | 129.00 |
| 3. | திருவேங்கைவாசல் தார்ச்சாலை மேம்பாடு செய்தல் (கி.மீ.0/0–2/4) (கிராமச் சாலை) | 117.00 |
| | மொத்தம் | 376.00 |
| (ரூபாய் மூன்று கோடியே எழுபத்தாறு இலட்சம் மட்டும்) | | |

**2.** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் பரிந்துரையின் அடிப்படையில், புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரின் மேற்கண்ட கருத்துருவினை ஏற்று, மேற்காண் சாலை மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதற்காக சுற்றுலாத்துறையின் மூலம் ரூ.**376.00** இலட்சத்திற்கு நிதி ஒப்பளிப்பு அளிக்குமாறு சுற்றுலா ஆணையர் அரசிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

**3.** சுற்றுலா ஆணையரின் மேற்கண்ட கருத்துருவை அரசு கவனமாக பரிசீலனை செய்து அதனை ஏற்று, புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருவேங்கைவாசல் அருள்மிகு பிரகதாம்பாள் திருவேங்கைநாதர் திருக்கோயில் மற்றும் திருநல்லூர் அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்மன் திருக்கோயில்களுக்கு செல்லும், மேலே பத்தி ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ள தார்ச்சாலைகளை ரூ.**376.00** இலட்சம் (ரூபாய் மூன்று கோடியே எழுபத்தாறு இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் மேம்பாடு செய்ய, சுற்றுலா ஆணையருக்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடுகிறது.

**4.** மேலே பத்தி **3**–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை ரூ.**376.00** இலட்சத்தினை (ரூபாய் மூன்று கோடியே எழுபத்தாறு இலட்சம் மட்டும்) பெற்று புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரிடம் வழங்குவதற்கும், மேற்காண் பணிகளை செயற்படுத்துதல் மற்றும் பராமரிப்பினை கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை), கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, புதுக்கோட்டை அவர்கள் மூலம் மேற்கொள்வதற்கும் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியருக்கு அனுமதி வழங்கவும் சுற்றுலா ஆணையருக்கு ஒப்புதல் வழங்கப்படுகிறது.

**5.** மேலே பத்தி **3**ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை பின்வரும் கணக்குத்தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும்.

> “**5054** – சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு – **80** – பொது –**800** ஏனைய செலவு – பன்னிரண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் II மாநிலத் திட்டம் KC முக்கிய சுற்றுலாத் தலங்களுக்கான அணுகுச் சாலைகளை மேம்படுத்துதல் – **16** பெரும்பணிகள் ”
> (குதொகு **5054 80 800** KC 1607)

6. இவ்வாணை நிதித்துறையின் இசைவினை, அத்துறையின் அ.சா எண். **9011**/கல்வி II/**2015**, நாள் **13.2.2015** வாயிலாகப் பெற்று வெளியிடப்படுகின்றது.

**( ஆளுநரின் ஆணைப்படி )**

**ரா.கண்ணன்**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

பெறுநர்
சுற்றுலா ஆணையர், சென்னை–**2**.
தலைமைப் பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை, சென்னை –**5**.
மாவட்ட ஆட்சித் தலைவர், புதுக்கோட்டை மாவட்டம்.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை – **9**.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை – **9**. (சுற்றுலா ஆணையர் வழியாக)
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை – **9/18**.

நகல்:–
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அலுவலகம், சென்னை – **9**.
மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – **9**.
மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – **9**.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர்,
சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை – 9.
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச்செயலர், நிதித் துறை, சென்னை – 9.
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச்செயலர்,
நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை, சென்னை – 9.
கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை),
கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, நெடுஞ்சாலைத்துறை, புதுக்கோட்டை.
சுற்றுலா அலுவலர், காரைக்குடி.
நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (எச்.ப்பி.1) துறை, சென்னை –9.
நிதி (கல்வி 2)த் துறை, சென்னை – 9.
சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (சு1/சு2/பொது) துறை, சென்னை–9.
தேசிய தகவலியல் மையம், சென்னை –9
(அரசு இணையதளத்தில் பதிவேற்றம் செய்வதற்காக)
சிறப்பு திட்ட அமலாக்கத் துறை, சென்னை – 9.
(அறிவிப்பு நிறைவேற்றப்பட்டது குறித்து உரிய பதிவுகள் மேற்கொள்ள)
உதிரி/இருப்பு கோப்பு.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்